# தென்கச்சியார் நூல்களில் கல்வியல் சிந்தனைகள்

முனைவர் இரா.கலையரசி

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## முன்னுரை

கல்வி ஒருவனுக்கு சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது.அது மனிதனை சுயசார்புடையவனாகவும், சுயநலமற்றவனாகவும் உருவாக்குகிறது. இயற்கையாக அமைந்துள்ள முழுமைத் தன்மையை வெளிப்படுத்துகிறது. இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் இயற்கையிலேயே அறிவுடையவனாக இருக்கின்றான். அறிவு வளர கல்வி தேவைப்படுகிறது. தனி மனிதனுக்குத் தேவைப்படும் கல்வி சமுதாய வளர்ச்சிக்கு மிகவும் அவசியமாகிறது.கல்வியே ஒருவனுக்கு மிகச் சிறந்த செல்வமாகிறது. மனிதனிடம் புதைந்து கிடக்கும் ஆற்றல்களையும், திறன்களையும் வெளிக்கொணர்ந்து மலர்ந்திடச் செய்யும் செயலே கல்வியாகும்.

## கல்வியின் சிறப்பு

கல்வி என்பது பண்பாட்டை வளர்க்கக் கூடியதாக இருக்க வேண்டும். பண்பாடு இல்லாத கல்வி எதற்கும் பயன்படாது.வாழ்கையைப் பண்பட்டதாக அமைத்துக் கொண்டு வாழ்வதற்குக் கல்வி துணை புரிகின்றது.மனிதர்கள் ஒவ்வொருவரும் கல்வியினை ஐயமறக் கற்று பண்பாட்டுடன் வாழ்ந்தால்தான் நாடும்,வீடும் முன்னேற்றம் அடையும்.அதனால் பண்பாட்டை வளர்க்காத கல்வி எதற்கும் பயன்படாது. இந்த உலகில் உள்ள எல்லாச் செல்வமும் அழிந்தாலும் கல்விச் செல்வமே என்றும் அழியாது நிலைத்து நிற்கும்.

பூமியில் உள்ள மரங்கள் சில வருடங்கள் கழித்து விழுந்து விடுகிறது.பெரிய கட்டிடம் மழைப்பொழிந்து இடிந்து விடுறது.சிலப்பேர் அழகாய் இருப்பார்கள். சில ஆண்டுகள் கழித்து அழகும் அழிந்து விடுகிறது. பணம் வைத்திருப்பவன் எல்லாவற்றையும் இழந்துவிட்டு ஒன்றும் இல்லாதவன் ஆகின்றான். ஆகவே எல்லாச் செல்வத்தையும் விட ஒருவனுக்கு கல்விச் செல்வமே அழிவு இல்லாத சிறந்த செல்வமாகக் கருதப்படுகிறது. 1

இதனை வள்ளுவர்,

> கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு
> மாடல்ல மற்ற யவை. 2

என்று கூறியுள்ளார். புாரதிதாசன்,

> எல்லா நலமும்ஈர் ந்திடும் கல்வி
>
> இல்லா வீட்டை இருண்ட வீடென்க!3

என்று கூறியுள்ளார்.

இவ்வாறு அழிவு இல்லாத செல்வமாக விளங்குகிறது. பண்பாட்டுடன் கூடிய கல்வியே ஒருவனுக்கு பயனைத் தருகின்றது எனற கல்வி சிந்தனையை தென்கச்சியார் எடுத்துரைத்துள்ளார்.'இன்றைய மாணவருக்கு மிகவும் தேவைப்படுவது பண்பாட்டுக் கல்வியாகும்'. இதுவே மனிதனை வாழவைக்கும் கல்வியாகும். இதனை ஒழுகக் கல்வி எனவும் கூறலாம்.ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு பண்பாட்டுப் பெருமை உண்டு.அதனால் மாணவர்கள் பண்பாட்டுடன் கூடிய கல்வியை கற்று பயன் பெறலாம்.

## கல்வி கற்கும் முறை

கல்வி அறிவுக் கண்ணைத் திறப்பதற்கும், மக்களை நல்வழிப்படுத்துவதற்கும் அவசியமான ஒன்றாகும். கல்வியை கற்கும் பொழுது சினம் கொள்ளாமலும், நிதானம் தவறாமலும், பொறுமையாகவும் இருக்க வேண்டும்.மாணவர்கள் கற்கும் கல்வியானது வாழ்க்கைக்குப் பயன்படக் கூடியதாக இருக்க வேண்டும். இன்றைய காலக்கட்டத்தில் கல்வியானது வெறும் ஏட்டுச் சுரைக்காயாகவே உள்ளது.அவ்வாறு இல்லாமல் கல்வியானது எல்லேருக்கும் பயன் தரும் வகையில் இருக்க வேண்டும்.

எப்படிப்பட்ட சோதனை ஏற்பட்டாலும், நிதானம் இழந்துவிடக் கூடாது. அனுபவமே ஒருவனுக்கு மிகச் சிறந்த பாடமாகும்.'பஞ்சபாண்டவர்கள் குருகுலத்தில் கல்வி கற்பதற்குச் சென்றார்கள். ஏற்கனவே அங்கு பதினைந்து பேர் கல்வி கற்றுக் கொண்டு இருந்தார்கள்.இவர்களையும் சேர்த்து அந்தக் குருகுலத்தில் மாணவர்களின் எண்ணிக்கை இருபது ஆயிற்று. எல்லோரும் ஆர்வத்தோடு படித்துக் கொண்டு இருந்தார்கள். சில ஆண்டுகள் கழிந்தன. எல்லோரும் ஊருக்குத் திரும்ப வேண்டிய நேரம் வந்தது.குரு ஒவ்வொரு மாணவராக அழைத்தார்.

இதுவரையில் நீங்கள் கற்று கொண்டதைப் பற்றி கூறுங்கள் என்று கேட்டார். அவரவர்கள் தாங்கள் எழுதி வைத்திருந்ததை கூறினார்கள். இருதியில் தர்மரிடம் கேட்கிறார்.அவர் பதில் கூறவில்லை.தன் கையில் உள்ள ஓலைச் சுவடிக் கட்டைப் பிரிக்கவே இல்லை. குரு தர்மரிடம் அதிகமாக எதிர்பார்த்தார்.தர்மர் பேசாமல் நின்றார். நீ இதுவரை கற்றுக் கொண்டது என்ன? என்று கேட்கிறார் குரு.உடனே தர்மர் இதுவரை நான் ஒன்றே ஒன்றுதான் கற்றுக்கொண்டேன்.அதுவே வாழ்க்கையில் எனக்கு முக்கியமான பாடமாக அமையும். மற்ற எதையும் எடுத்துச் சொல்வதற்கு நான் விரும்பவில்லை என்றார் தர்மர். குருவுக்கு கோபம். அதனால் தர்மரின் கண்ணத்தில் ஓங்கி அறைந்தார். பொருமை இழந்த குரு நீ என்னதான் கற்றுக் கொண்டாய் கூறு என்று தர்மரிடம் கேட்கிறார். தர்மர் ஓலைச்சுவடியைக் குருவிடம்

கொடுக்கிறார்.குரு ஓலைச்சுவடியை வாங்கி சத்தம் போட்டுப் படித்தார்.

'எப்படிப்பட்ட சோதனை ஏற்பட்டாலும்,நிதானம் இழந்து கோபத்திற்கு ஆளாகக் கூடாது' என்று எழுதியிருந்தது. அந்த வினாடியே குருவும் மற்ற மாணவர்களும், தர்மர் கற்றுக் கொண்டது வெறும் ஏட்டுச் சுரைக்காய் இல்லை. வாழ்க்கையில் பயன்படக் கூடிய மிக முக்கியமான அனுபவபாடத்தை அவர் கற்றிருக்கின்றார் என்ற உண்மையைப் புரிந்துக் கொண்டார்கள். எனவே மாணவர்கள் கற்கும் கல்வியனது வெறும் ஏட்டோடு நின்றுவிடாமல் அது வாழ்க்கைக்குப் பயன்படக்கூடியதாக இருக்க வேண்டும்.4

**கல்வியில் கவனம்**

கல்வி கற்கும்போது அதில் முழுக்கவனம் செலுத்த வேணடும். அப்போதுதான் சிறப்பான கல்வியைப் பெறமுடியும். எத்தனை இடையூறுகள் வந்தாலும் மனதை ஒருநிலைப்படுத்தி கல்வியை கற்க வேண்டும். கல்வி கற்பதற்குரிய பருவத்தில் கற்றால்தான் சிறப்படையும் என்பதனை, ' இளமையில் கல்' என்று ஔவையார் கூறியுள்ளார். கல்வி கற்பது எல்லேருக்கும் பொதுவன ஒன்றாகும். கல்வி கற்கும் போது தன் முழுக்கவனத்தையும் பாடத்திலேயே செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தும் போது தன்னைச் சுற்றி என்ன நடந்தாலும் தெரியாது.

யாக்ஞவல்கியரின் குருகுலத்தில் அரசராக இருந்த ஜனகரும் படித்தார். குரு தினமும் ஜனகர் வந்து சேர்ந்த பிறகுதான் பாடங்களை ஆரம்பிப்பது வழக்கம். இது ஜனகருடன் பயிலும் மற்ற மாணவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஜனகர் ஓர் அரசர் என்பதால்தான் குரு அவருக்கு இவ்வளவு மரியாதை கொடுக்கிறார் என்று அந்த மாணவர்கள் நினைத்தார்கள். மாணவர்கள் நினைப்பது யோக சக்தியின் மூலம் குருவுக்கு தெரிந்தது. குரு மாணவர்களை நினைத்து கவலைப்பட்டார். அவர்களுடைய கல்வியின் பலனை அவர்களுடைய தவறான நினைப்பின் மூலமாக இழந்து விடுவார்களோ என்று குரு வருந்தினார்.

ஒரு நாள் வகுப்பு நடந்துக் கொண்டிருந்தது. அவசர அவசரமாக சிலப் பேர் ஓடிவந்தார்கள். ஐயா, நகர் தீப்பிடித்து எறிந்துக் கொண்டிருக்கிறது என்றார்கள். இதைக் கேட்டவுடன் சில மாணவர்கள் எழுந்து குருவிடம் சொல்லாமலேயே வெளியே சென்றுவிட்டார்கள்.தங்கள் உடைமைகளையும் வெளியே எடுத்துச் சென்றுவிட்டார்கள்.அரண்மனையிலேயும் நெருப்பு சூழ்ந்துக் கொண்டது. ஆரண்மனையில் உள்ள எல்லோரும் தெருவில் ஓடினார்கள்.சில பேர் நெருப்பில் மாட்டிக் கொண்டார்கள்.எல்லோரும் பதட்டமாக இருந்தார்கள்.ஆனால் ஜனகர் மட்டும் கொஞ்சம் கூட சலனம் இல்லாமல் குரு சொல்லிக் கொடுக்கும் பாடத்திலேயே மூழ்கியிருந்தார்.

குரு, ஜனகரைப் பார்த்து உன்னுடைய அரண்மனையிலேயும் தீப்பிடித்துக் கொண்டதாம் என்றார்.அவர் சொன்ன வார்த்தைகள் கூட ஜனகர் காதில் விழவில்லை. அந்த அளவுக்கு ஜனகர் பாடத்தின் மேல் ஒன்றிப்போய் இருத்தார்.5

இதுப்பேன்ற ஆழ்ந்த கல்விச் சிந்தனை உள்ள மாணவர்களுக்காக எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் காத்திருந்து கற்பிக்கலாம் என்பதை குரு மாணவர்கள் மத்தியில் பதியவைத்தார்.

**முடிவுரை**

இதுப்போல மாணவர்கள் கல்வி கற்கும் பொழுது எந்தக் காலத்திலும், எந்த சூழ்நிலையிலும் மனம் மாறாது கவனத்தோடு ஒன்றி கல்வி கற்க வேண்டும். பண்பாட்டுடன் கற்கும் கல்வியே பயனைத் தரும். வெறும் ஏட்டை மட்டும் படித்தால் இருக்காது. என்ற கல்வியல் சிந்தனையை மாணவர்கள் மத்தியில் தென்கச்சியார் விதைத்துள்ளார்.

**சாறெண் குறிப்புகள்**


1.கோ.சுவாமிநாதன், தகவல் களஞ்சியம் ,தொகுதி-1, ப.31

2.குறள் எண்.400.

3.பாரதிதாசன், இருண்ட வீடு, ப.21.

4.கோ.சுவாமிநாதன், தென்கச்சி வழங்கும் நீதிக்கதைகள், தொகுதி-3, ப.66.

5.கோ.சுவாமிநாதன், வானொலியில் இன்று ஒரு தகவல்,பாகம்-15, ப.51.